2009 ஜூன் 19]

திரு. இரா. இராம்பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகளுக்கு, வரக்கூடிய காலங்களில் போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கப்படுமா என்பதையும் நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதற்கடுத்து, பரமக்குடி நகராட்சிக்கு நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காக பரமக்குடி நகரின் வைகை ஆற்றினுடைய எல்லைப் பகுதியில் மற்றும் பொட்டுதட்டி அருகிலே தடுப்பணைகள் அமைப்பதற்கும் என்னுடைய கோரிக்கையை வைத்து, தங்கள்வாயிலாக அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் 22-6-2009 (திங்கட்கிழமை) அன்று தொடரும்.

4. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 22-6-2009 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 22-06-2009 திங்கட்கிழமை அன்று தளர்த்தி, அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

22-06-2009 திங்கட்கிழமை, வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (22-06-2009) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

22. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் 2000-2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்/ கருத்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

23. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் 2001-2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்/ கருத்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1994) 28 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

24. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் 2002-2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின்/ கருத்துரைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை.